# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066956

1. District மாவட்டம் : திருவாரூர் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 02/2020 Date: நாள் 16.10.2020

2. (i) Act சட்டம்: 102 Crpc & 7, 7A, 8, 12, 13(2) r/w Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: 13(1)(a) of prevention of Corruption Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act 1988 as amended 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 15.10.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 19.30 to 23.20 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் 16.10.2020
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 02.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 32 km, தென் மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Direct purchase Center, 904. Kannarappettai, Mannargudi
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. Jayakumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Arputhasamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32/2020 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி Senior Revenue Inspector, Thiruvarur Taluk.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(A1) P. Anantharaj 49/20, Panneerselvam, Bill clerk, Temp. 904. Kannarappettai DPC, Mannargudi, (A2) G. Kannagarajan 47/20, S/o. Ganesan, Seasonal Night watchman, Temp 904. kannarappettai DPC, Mannargudi. (A3) S. Jayakumar 60/20, S/o Subramaniyan, 17/37, 3rd street, Mannargudi. Thiruvarur. (A4) Tr. Suresh, Assitant Quality Inspector, TNCSC, open cap Storing point, Ashasam, Mannargudi.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

இன்று 16.10.2020-ந்தேதி 0200 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, துணை காவல் கண்காணிப்பாளர் திரு.B.V.நந்தகோபால் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது அ. ஜெயக்குமார்,த/பெ D.அற்புதசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர் என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு :- **அனுப்புநர்:** அ. ஜெயக்குமார், த/பெ D.அற்புதசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர். **பெறுநர்** துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, இன்று 15.10.2020 ஆம் தேதி திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, கண்ணாரப்பேட்டை நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் நெல் விற்பனைக்கு வந்த விவசாயிகளிடம் கையூட்டு வாங்குவதாக கிடைத்த தகவல் தொடர்பாக தஞ்சாவூர் ஆய்வு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
B.V. Nandhagopal 16/10/2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ....DSP.................
Rank: நிலை ....VAC, Thiruvarur. No.

குழும அலுவலர் திரு.S.R.சுப்பையா அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் அ. ஜெயக்குமார், த/பெ D.அற்புதசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர் ஆகிய நான் மற்றும் திரு.க.சண்முகம், த/பெ கலியபெருமாள், கிராம நிர்வாக அலுவலர், 31-தெற்குசேத்தி, திருவாரூர் தாலுக்கா ஆகியோர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.B.V.நந்தகோபால் குழுவினருடன், 19.30 மணி முதல் 23.20 மணி வரை திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், துளசேந்திரபுரம் பஞ்சாயத்து, 904 கண்ணாரப்பேட்டை நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது மேற்படி நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் பருவகால பட்டியல் எழுத்தராக பணியில் இருந்த திரு.ப.ஆனந்தராஜ் என்பவர் நெல் கொள்முதல் செய்யும் போது விவசாயிகளிடம் சிப்பத்திற்கு ரூ.25/- முதல் ரூ.35/- வரை வசூல் செய்து வைத்திருந்த ரூ.32,980/-, மேற்படி நிலையத்தில் இரவு காவலராக பணியில் இருந்த திரு.க.கனகராஜன் என்பவர் நெல் கொள்முதல் செய்யும் போது விவசாயிகளிடம் சிப்பத்திற்கு ரூ.25/- முதல் ரூ.35/- வரை வசூல் செய்து பட்டியல் எழுத்தரிடம் கொடுப்பதற்காக வைத்திருந்த ரூ.4,810/- மற்றும் மேற்படி நிலையத்தில் TVR 629 என்று சாக்கு மூட்டைகளில் குறிப்பிடப்பட்டிருந்த நெல் மூட்டைகள் இருந்த TN 33 Z 6777 என்ற லாரி தொடர்பாக ஆஜரில் இருந்த லாரி ஒப்பந்ததாரர் திரு.சு.ஜெயக்குமார் என்பவரிடம் இருந்த கணக்கில் வராத தொகை ரூ.50,000/- ஆக மொத்த தொகை ரூ.87,790/- கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த திடீர் சோதனையின் போது, மன்னார்குடி அசேஷத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் திறந்தவெளி நெல் மூட்டைகள் சேமிப்பு கிடங்கிலிருந்து, இந்த கிடங்கின் உதவி தர ஆய்வாளர் திரு.சுரேஷ் என்பவர் மேற்படி TN 33 Z 6777 என்ற லாரியில் TVR 629 என்று சாக்கு மூட்டைகளில் குறிப்பிடப்பட்டிருந்த 155 நெல் மூட்டைகளை கண்ணாரப்பேட்டை நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் பட்டியல் எழுத்தர் திரு.ப.ஆனந்தராஜ் உதவியுடன் வேறுஒரு விவசாயியின் பெயரில் கொள்முதல் செய்வது போல் ஆவணங்கள் தயார் செய்து கையாடல் செய்த குற்ற நடவடிக்கை தொடர்பாக மேற்படி 1) ப.ஆனந்தராஜ், த/பெ பன்னீர்செல்வம், பருவகால பட்டியல் எழுத்தர், கண்ணாரப்பேட்டை நேரடி நெல் கொள்முதல் நிலையம், 268

16/10/2020

அசேஷம், மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம், 2) க.கனகராஜன், த/பெ கணேசன், பருவகால இரவு காவலர், கண்ணாரப்பேட்டை நேரடி நெல்கொள்முதல் நிலையம், தாதந்திருவாசல், கோட்டூர், திருவாரூர் மாவட்டம் மற்றும் லாரி ஒப்பந்ததாரர் 3) S.ஜெயக்குமார், த/பெ சுப்பிரமணியன், 17/37, 28வது தெரு, மன்னார்குடி மற்றும் 4) திரு.சுரேஷ், உதவி தர ஆய்வாளர், திறந்த வெளி நெல் சேமிப்பு கிடங்கு, TNCSC, அசேஷசம், மன்னார்குடி ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். Sd. (அ. ஜெயக்குமார்) முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர். திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர். இன்று 15.10.2020ம் தேதி திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, கண்ணாரப்பேட்டை நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் நெல் விற்பனைக்கு வந்த விவசாயிகளிடம் கையூட்டு வாங்குவதாக கிடைத்த தகவல் தஞ்சாவூர் ஆய்வு குழும அலுவலர் திரு. சுப்பையா அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் தஞ்சாவூர் ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜரான 1) அ. ஜெயக்குமார், த/பெ D.அற்புதசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர், 2) திரு.க.சண்முகம், த/பெ கலியபெருமாள், கிராம நிர்வாக அலுவலர், 31-தெற்குசேத்தி, திருவாரூர் தாலுக்கா ஆகியோருடன் துணை காவல் கண்காணிப்பாளர் திரு.B.V.நந்தகோபால் மற்றும் குழுவினருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு 19.30 மணிக்கு கண்ணாரப்பேட்டை நேரடி நெல்கொள்முதல் நிலையம் வந்தும் திடீர் சோதனை மேற்கொண்டதற்கான நடவடிக்கை விவரம். இந்த திடீர் சோதனை குழுவில் இருந்த அலுவலர்கள் விவரம்: 1) திரு. அ.ஜெயக்குமார், த/பெ D.அற்புதசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர். 2) திரு. க.சண்முகம், த/பெ கலியபெருமாள், கிராம நிர்வாக அலுவலர், 31-தெற்குசேத்தி, திருவாரூர் தாலுக்கா. 3) திரு. B.V.நந்தகோபால், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். மேற்படி திடீர் சோதனையின் போது கண்ணாரப்பேட்டை நேரடி நெல் கொள்முதல்

நிலையத்தில் ஆஜரில் இருந்தவர்கள் விவரம். 1) ப.ஆனந்தராஜ், த/பெ பன்னீர்செல்வம், பருவகால பட்டியல் எழுத்தர், கண்ணாரப்பேட்டை நேரடி நெல்கொள்முதல் நிலையம், 268 அசேஷம், மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம். 2) க.கனகராஜன், த/பெ கணேசன், பருவகால இரவு காவலர், கண்ணாரப்பேட்டை நேரடி நெல்கொள்முதல் நிலையம், தாதந்திருவாசல், கோட்டூர், திருவாரூர் மாவட்டம். 3) ச.சந்தானம், த/பெ சச்சிதானந்தம், தலைமை சுமை தூக்கும் தொழிலாளர், (Head Load Man), கண்ணாரப்பேட்டை, பைங்காநாடு, மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம். 4) முருகேசன், த/பெ தேசபந்து, சுமை தூக்கும் தொழிலாளர். 5) கல்யாணசுந்தரம், சுமை தூக்கும் தொழிலாளர், 6) கலியமூர்த்தி, சுமை தூக்கும் தொழிலாளர், 7) பிரேம்ஆனந்த், சுமை தூக்கும் தொழிலாளர், 8) ராஜேந்திரன், சுமை தூக்கும் தொழிலாளர், 9) விஜயஅரசன் சுமை தூக்கும் தொழிலாளர், 10) S.ஜெயக்குமார், த/பெ சுப்பிரமணியன், 17/37, 28வது தெரு, மன்னார்குடி. மேற்படி நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த திடீர் சோதனையின் போது நிலையத்தினுள் பட்டியல் எழுத்தர் அறைக்கு முன்பாக உள்ள மேடையில் TN 33 Z6777 என்ற லாரி நின்று கொண்டிருந்தது. அதில் இருந்து நெல் மூட்டைகள் இறக்கி வைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அவற்றை அப்படியே நிறுத்தி வைக்கும்படி அறிவுறுத்தியும் திடீர் சோதனை ஆரம்பிக்கப்பட்டது. பருவகால பட்டியல் எழுத்தர் திரு.ப.ஆனந்தராஜ் அவர்களை விசாரித்தபோது அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூ. 32980/- (ரூ.500 x 57 = ரூ. 28,500/-, ரூ.200 x 8 = ரூ. 1,600/-, ரூ.100 x25 = ரூ. 2,500/-, ரூ.50 x 6 = ரூ. 300/-, ரூ.10 x 8 = ரூ. 80/-) இருந்தது. இந்த பணம் குறித்து விசாரிக்க இன்று 15.10.2020 நெல் பிடித்ததற்கு விவசாயிகளிடமிருந்து ஒரு மூட்டைக்கு ரூ.25/- முதல் ரூ.35/- வரை வாங்கிய பணம் என தெரிவித்தார். அதனால் இந்த தொகை ரூ.32,980/- விசாரணைக்காக அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து மேற்படி நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் பணியில் இருந்த பருவகால இரவு காவலர் திரு.கனகராஜ் என்பவரை விசாரிக்க, அவர் தனது சட்டை பாக்கெட்டிலிருந்து பணம் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூ. 4,810/- (ரூ.500 x 7 = ரூ.

16/10/2020

3,500/-, ரூ.200 x 2 = ரூ. 400/-, ரூ.100 x8 = ரூ. 800/-, ரூ.50 x 2 = ரூ. 100/-, ரூ.10 x 1 = ரூ. 10/-) இருந்தது. இந்த பணம் குறித்து விசாரிக்க இன்று 15.10.2020 நெல் பிடித்ததற்கு விவசாயிகளிடமிருந்து ஒரு மூட்டைக்கு ரூ.25/- முதல் ரூ.35/- வரை வாங்கிய பணம் என்றும் பட்டியல் எழுத்தரிடம் கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அதனால் இந்த தொகை ரூ.4810/- விசாரணைக்காக அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின் போது நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் ஆஜரில் இருந்த கீழ்கண்ட சுமை தூக்கும் தொழிலாளர்களை விசாரணை மேற்கொண்டபோது இவர்களில் 1) S.சந்தானம், 2) கல்யாணசுந்தரம், 3) முருகேசன், 4) கலியமூர்த்தி, 5) பிரேம்ஆனந்த், 6) ராஜேந்திரன், 7)விஜயஅரசன் ஆகியோர், இவர்கள் கண்ணாரப்பேட்டை நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சுமை தூக்கும் தொழிலாளர்களாக பணிபுரிவதாக தெரிவித்தார்கள். இதில் திரு.முருகேசன் என்ற சுமை தூக்கும் தொழிலாலியிடம் ரூ.800/- பணம் வைத்திருந்ததை ஆஜர்படுத்தினார். இது குறித்து விசாரிக்க இவருக்கு மேற்படி நிலையத்தின் தெற்கே வயல் இருப்பதாகவும் அதில் இன்று உரம் அடித்தவர்களுக்கு சம்பளம் கொடுக்க வீட்டிலிருந்து ரூ.2000/- எடுத்து வந்து கூலித் தொகை ரூ.1,200/- கொடுத்தது போக மீதி ரூ.800/- வைத்திருந்ததாக தெரிவித்ததால், இந்த பணம் ரூ. 800/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்குறிப்பட்ட சுமைதூக்கும் தொழிலாளர்களுடன் ஆஜரில் இருந்த P.கேசவன், த/பெ பன்னீர்செல்வம், அசேஷம் மற்றும் D.கலைமணி, த/பெ தெய்வசிகாமணி, மேலமரவக்காடு, மன்னார்குடி என்பவர்கள் மன்னார்குடி அசேஷத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக சேமிப்பு கிடங்கில் சுமைதூக்கும் தொழிலாளர்களாக வேலைசெய்வதாகவும், இந்த சேமிப்பு கிடங்கில் உதவி தர ஆய்வாளர் திரு.சுரேஷ் அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் TN 33 Z6777 என்ற லாரியில் 155 நெல் மூட்டைகள் மேற்படி கண்ணாரப்பேட்டை TNCSC நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் இறக்குவதற்கு அனுப்பியதால் வந்ததாகவும், மேற்படி நிலையத்தில் உள் நின்ற TN 33 Z6777 என்ற லாரியை அடையாளம் காண்பித்தார்கள். அந்த லாரியில் 155 நெல் மூட்டைகள் இருந்தது. அந்த நெல் மூட்டையின் சாக்கில் ஒரு பக்கம் TVR 629 என்றும் மற்றொரு பக்கம் TNCSC

G.V. Nev... 16/10/20

முத்திரையும் இருந்தது. எனவே இது குறித்து பட்டியல் எழுத்தர் திரு.ஆனந்தராஜ் அவர்களை விசாரிக்க இன்று மாலை 6 ½ மணியளவில் அசேஷத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக சேமிப்பு கிடங்கில் உதவி தர ஆய்வாளராக உள்ள திரு.சுரேஷ் அவர்கள் அவரது கைபேசி எண் 7010302135 லிருந்து இவரது கைபேசி எண் 6379029580 திற்கு பேசி TN· 33 Z6777 என்ற லாரியில் அசேஷம் கேப்பிலிருந்து 155 நெல் மூட்டைகள் அனுப்புவதாகவும், அதை இறக்கி கொண்டு அதை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்தது போல் பதிவு செய்ய சொன்னார் எனவும் அதன்பேரில் அடையாள வில்லை பதிவேட்டில் பக்கம் எண் 008-ல் நாளைய தேதி 16.10.2020 என தேதியிட்டு 76-வது அடையாள வில்லை எண் குறிப்பிட்டு எனக்கு தெரிந்த விவசாயி கண்ணரப்பபேட்டையை சேர்ந்த திருமலர்செல்வம், த/பெ திருஞானம் என்ற பெயரில் எழுதி வைத்திருந்தேன். நெல் இறக்கிய பிறகு எத்தனை மூட்டை உள்ளது என்று பார்த்த பிறகு மற்ற விபரங்களை எழுதிக் கொள்ளலாம் என்று இருந்தேன் என்று அடையாள வில்லை பதிவேட்டை காண்பித்தார். அந்த பதிவேட்டிலும் அவ்வாறே விபரம் இருந்தது. மேலும் கண்ணாரப்பேட்டை நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை வைக்கும் சாக்கில் TVR 904 என அடையாள எண் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்று கூறினார். இருப்பு மூட்டைகளின் சாக்குகளை பார்த்த போது அவ்வாறான அடையாள எண் TVR 904 மேற்படி நிலையத்தில் கொள்முதல் செய்யப்பட்ட சாக்குகளில் இருந்தது. மேற்படி லாரியில் இருந்த TVR 629 என்று குறிப்பிட்டிருந்த நெல் மூட்டைகளில் 115 மூட்டைகள் அட்டியில் இறக்கப்பட்டும் 40 மூட்டைகள் இறக்கப்படாமல் லாரியில் இருந்தது. மேலும் ஆஜரில் இருந்த சு.ஜெயக்குமார் 60/2020, த/பெ சுப்பிரமணியன், 17/37 28வது தெரு, மன்னார்குடி, திருவாரூர் என்பவரை விசாரிக்க இவர் முதலில் தான் சிட்டி யூனியன் பேங்கில் எழுத்தராக பணிபுரிவதாக தெரிவித்தார். அதற்குரிய அடையாள அட்டையை கேட்டவுடன், தான் மாற்றி கூறியதாகவும் ஆனால் தான் ஆர்னிகா என்ற TNCSC லாரி ஒப்பந்ததாரரிடம் சப்-கான்ட்ராக்டராக உள்ளதாகவும், மேற்படி லாரி TN 33 Z6777 –யின் டிரைவர் K.ரவிச்சந்திரன் என்பவர் போன் செய்ததால் வந்ததாகவும் கூறினார். இவரை சோதனையிட அவரிடம் ரூ. 50,000/- இருந்தது

( ரூ.500 x 100 =50,000/-) இது குறித்து விசாரிக்க இவர் இந்த பணம் குறித்து விளக்கம் ஏதும் கூறாததால் சந்தேகத்தின் பேரில் இந்தப் பணம் ரூ.50,000/- கைப்பற்றப்பட்டது. மேற்படி டிரைவர் K.ரவிச்சந்திரன் குறித்து விசாரிக்க லாரியில் டிரைவர் இல்லை. திடீர் சோதனை விபரம் தெரிந்த பிறகு நேரடி நெல்கொள்முதல் நிலையத்திலிருந்து தலைமறைவாகிவிட்டார் என தெரியவந்தது. மேற்படி திடீர் சோதனையின் போது கீழ்கண்ட ஆவணங்கள் பட்டியல் எழுத்தர் திரு.ஆனந்தராஜ் அவர்களால் ஆஜர்படுத்தப்பட்டதை கைப்பற்றப்பட்டது. 1) Movement Reconciliation Register, 2) Stock cum Movement Register, 3) Staff Attendance Register 2020, 4) Load Man Attendance Register 2020, 5) நெல்கொள்முதல் பட்டியல் புத்தகம், 6) Daily Abstract Book, 7) Purchase Day Book, 8) உள் மண்டல அனுப்புகைப் படிவ புத்தகம் புத்தக எண் 1292, 9) தினசரி கொள்முதல், இயக்கம் மற்றும் இருப்பு அறிக்கை புத்தகங்கள் இரண்டு (1) 07.09.2020 முதல் 09.10.2020 வரை, (2) 10.10.2020 முதல் 15.10.2020 வரை. 10) சாக்கு. கணக்கு பதிவேடு, 11) அடையாள வில்லை பதிவேடு. மேலும் மேஸ்திரி திரு.சந்தானம், சுமை தூக்கும் தொழிலாளர் ஆஜர் படுத்திய இரண்டு நோட்டு புத்தகங்களும் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணத்தின் விபரம்.

| வ. எண் | யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது | மொத்தத் தொகை | ரூபாய் நோட்டுகள் விபரம் |
|---|---|---|---|
| 1 | ப.ஆனந்தராஜ், த/பெ பன்னீர்செல்வம், பருவகால பட்டியல் எழுத்தர், கண்ணாரப்பேட்டை நேரடி நெல்கொள்முதல் நிலையம், எண் 268 அசேஷம், மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம். | ரூ.32,980/- | ரூ.500 x 57 = ரூ. 28,500/-,<br>ரூ.200 x 8 = ரூ. 1,600/-,<br>ரூ.100 x25 = ரூ. 2,500/-,<br>ரூ.50 x 6 = ரூ. 300/-,<br>ரூ.10 x 8 = ரூ. 80/- |
| 2 | க.கனகராஜன், த/பெ கணேசன், பருவகால இரவு காவலர், கண்ணாரப்பேட்டை நேரடி நெல்கொள்முதல் நிலையம், தாதந்திருவாசல், கோட்டூர், திருவாரூர் மாவட்டம். | ரூ.4,810/- | ரூ.500 x 7 = ரூ.3,500/-, ரூ.200 x 2 = ரூ. 400/-,<br>ரூ.100 x8 = ரூ. 800/-,<br>ரூ.50 x 2 = ரூ. 100/-,<br>ரூ.10 x 1 = ரூ. 10/- |

16/10/2020

| | | | |
|---|---|---|---|
| 3 | S.ஜெயக்குமார், த/பெ சுப்பிரமணியன், 17/37, 28வது தெரு, மன்னார்குடி. | ரூ.50,000/- | ரூ.500 x 100 = ரூ. 50,000/-, |
| | கூடுதல் | ரூ.87790/- | |

திடீர் சோதனை நடந்து கொண்டிருந்த போது இரவு 11.00 மணி அளவில் நேரடி கொள்முதல் நிலையத்தில் மேற்படி லாரி டிரைவர் திரு.ரவிச்சந்திரன் ஆஜரானார். திடீர் சோதனையின் போது 1) ஆனந்தராஜ், பருவகால பட்டியல் எழுத்தர், 2) கனகராஜன், கொள்முதல் நிலைய இரவு காவலர், 3) ஜெயக்குமார், 4) K.ரவிச்சந்திரன் ஆகியோரின் வாக்குமூலங்கள் தனியாக பதிவு செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை 15.10.2020 ஆம் தேதி இரவு 11.20 மணிக்கு முடிக்கப்பட்டது. அய்யா, மேற்படி புகார் மீது இன்று 16.10.2020-ந் தேதி 0200 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2020 U/s. 102 Crpc, 7, 7A, 8, 12, 13(2) r/w 13(1)(a) of Prevention of Corruption Act 1988 as Amended 2018 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. (Sd) திரு. B.V.நந்தகோபால், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். 16/10/2020

இதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் திரு. அ.ஜெயக்குமார், த/பெ D.அற்புதசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட அலுவலகம், திருவாரூர் என்வரின் புகார், திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்களுக்கு அனுப்பியும் இதன் நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல்கள் நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

B.V.Nandagopal 16/10/20

துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவாரூர்.